[illegible]

[illegible] 15 [illegible] 5

Jan 1942

JC
00)211, N2)51X
N42 155
187006

REGD No. M 3438

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந்தமிழுந் தழைத்தினி தோங்க

OFFICE OF THE REGISTRAR
2 - JAN 1942
MADRAS



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கரு } திட்டை. விசு—மார்கழி 1942—ஜனவரி—1உ { திங்கள் ரு.

| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 1. | மதிப்புரை மஞ்சரி ... | 101 |
| 2. | இராமநாட் சப் கோர்ட் ... | 103 |
| 3 | நடுநிலையுடையவர் எழுதிய கடிதம் ... | ,, |
| 4. | ஆசிரியப்பாவின் அவதாரவழக்கு... | 104 |
| 5. | சமரச உணர்ச்சி ... | ,, |
| 6. | அருட்பெருஞ்சோதி ... | 105 |
| 7. | கந்த சஷ்டி விரதம் .... | 108 |
| 8. | திருக்கார்த்திகை ... | 109 |
| 9. | சிவாலய தெரிசன முறை ... | 112 |
| 10. | திருக்கோயிலில் செய்யத் தகாத குற்றங்கள் | ,, |
| 11. | சர்வாதிகாரிகளின் உயிரைப்புரக்கும் ஒப்பற்ற வீரர்கள் | 113 |
| 12. | சிவசோதி இயல் ... | 116 |
| 13. | தென்னிந்தியப் புலவரும் அவர்தம் நூலின் நயமும் | 119 |
| 14. | பத்திரிகைகளின் உற்பத்தியும் பயனும் | 121 |
| 15. | இராகு, குளிகை முதலிய காலங்கள் | 124 |

ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், திட்டை. S. I. R.)

# செய்தித்திரட்டு.

**உள்ளூர்:**—சிவாலயத் திருப்பணி முதல்திருமதில் முற்றும் முடிந்தது. தைத்திங்களில் விமான வேலைகள் தொடங்கப்பெறும். குடவறை இரண்டாங்கால்வரி சேர்மானமாகிறது.

சிவாலயத்தில் கார்த்திகைச் சோமவார உபயம் மூன்றாவது குடமங்கலம் திரு, தனுக்கோடியா பிள்ளையவர்களாலும், நான்காவது தஞ்சை மருந்துக்கடை திரு, கோவிந்தசாமிபிள்ளையவர்களாலும் நடைபெற்றது.

மார்கழி சகூஉ அகரமாங்குடி ராஜாங்கம் திரு அண்ணாவையர் வகையாரால் திருவாதிரை உபயம் நடைபெறும்.

**பரிமணங்குடி:**—ஸ்ரீஷண்முகநாத சுவாமிகோயிலில் திருக்கார்த்திகைத் திருநாள் கலசபூசை ஜெபம் ஓமம் ஆகியவைகளுடன் திருமஞ்சனம் திவ்ய அலங்கார திருவாராதனைகளும் தீபக்காட்சி சொக்கப்பனை தெப்பம் முதலிய சிறப்புகளும்செய்து திருப்புகழ் பாடிசெவ்விதிற் கொண்டாடப் பெற்றது. தை கநூஉ தொடங்கி உஉஉ வரை திருவுலா விரிவுரை எருது விளையாட்டு தெய்வயானை யம்மையார் திருமணம் மஞ்சணீராட்டு ஆகிய சிறப்புக்களுடன் திருவிழா நடைபெறும்.

**காரைக்குடி:**— நாகநாதபுரத்தில் ஆரியம் தமிழெனும் இருமறைப் பாடசாலைகளின் பரிபாலகராகிய சிவநேசச் செல்வர், பழ. செ. மு. முத்துக்கருப்பன் செட்டியாரவர்கள் பல ஆண்டுகளாக நாகநாதபுரம் சிவாலயத்தில் நடாத்திவரும் தேவாரத் திருமுறைப் பாராயணம் கார்த்திகை கசூஉ நிறைவேறி வழக்கம் போல் மீண்டும் தொடங்கப்பெற்றது. சோமவாரமும் பிரதோஷமும் கூடிய அன்று கணேச ஸ்கந்தராதிய மூர்த்திகட்கும் பெரியநாயகியுடனுறை நாகநாத சுவாமிக்கும் சைவ சமய பரமாசாரியர்களாகிய நால்வர்க்கும் திருமஞ்சன திருவாராதனைகளும் பெரியநாயகி உடனுறை நாகநாத சுவாமியுடன் தேவாராதி பன்னிருதிருமுறைகளையும் மேனதாள விருதுகளுடன் ஆரியம் தமிழெனும் இருபெரு மறைகளும் முழங்க திருவுலாவும் செய்வித்து தேவார பாடசாலை ஆசிரியர் தேவார சிகாமணிதிரு, அ. க. அருணாசல தேசிகரவர்களால் திருமுறைநிறைவும் தொடக்கமும் செய்யப்பெற்றது. உள்ளூர் அன்பர்களுடன் வெளியூர்களிலிருந்து அன்பர் பலர் வந்து தெரிசித்து இன்புற்றனர். தேவாரபாடசாலையில் இப்போது ஐந்து மாணவர்கள் இருந்துவருகிறார்கள். தேசிகர் அவர்கள் நன்றாகக் கற்பித்து தினந்தோறும் திருச்சன்னிதானத்தில் பாராயணம் நடாத்தி வருகின்றார்கள்.

இவ்வுயரிய சிவகைங்கர்யத்தை இனிது நடாத்திவரும் திருவாளர் பழ. செ. மு. முத்துக்கருப்பன் செட்டியாரவர்கட்கு எல்லாநன்மையும் மேன்மேலும் பெருக உண்டாவதாகவும். அவர்களும் அவர்களின் வழித்தோன்றல்களும் சைவம் வளர்த்து நெடிதுவாழவும் பெரியநாயகி பாகராகிய நாகநாதசுவாமி பேரருள் புரிவாராக.

**ஆவுடையார்கோயில்:**—ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளுக்கு மார்கழி அஉ தொடங்கி திருவிழா நடைபெறுகிறது. கஅ-உயாகிய இன்று மாலை திருவாசகக்காட்சியும் இரவு வெள்ளிரதக்காட்சியும் நாழிகை 22½ க்குமேல் 26வ க்குள் உபதேசக்காட்சியும் நடைபெற்று திருவாதிரைத் திருநாள் நிறைவேறும். கOஉ முதல் நேற்றுவரை ஒவ்வொருநாளும் மாலை 4 மணி முதல் சைவசமய விரிவுரைகள் நிகழ்ந்தன.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

OFFICE OF THE REGISTRAR OF ... 2 - JAN 1942 MADRAS

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.

| ஆண்டு கரு. | விசு – மார்கழி<br>1942—ஜனவரி—1௳ | திங்கள் ரு |
|---|---|---|

"உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே."

## மதிப்புரை மஞ்சரி.

---

**பெண்ணினல்லார்:**— இது திருநெல்வேலிப்பேட்டை மெய்கண்டான் நிலைய தர்மகர்த்தர் ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்களின் நல்லறமனைவியார் திருமதி மீனாட்சியம்மையவர்களால் இயற்றி சிவநேசனில் அச்சிடப்பட்டு புத்தகமாக்கப்பெற்றது. 'குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்' என்னும் நலமிகு வாக்குக் கிணங்க கொழுநற்பேணிய நற்றவ நங்கையர்களுள் பதினொருவரின் கற்பின் பொற்பையும் கற்பின் திறனால் தத்தம் கணவரும் தாமும் பெற்றபேறும் சிவபெருமான் கருணைத்திறனும் செவ்விதிற் றிகழும் இந்நூல் பொதுவாகத் தமிழ் நங்கையரும் நம்பியரும் சிறப்பாக சைவ நங்கையரும் நம்பியரும் படித்துப்பயன் பெறத்தக்கது. இதன்விலை அணா ஆறு. செங்கற்பட்டு ஜில்லா உத்தரமேரூர், போர்டு மிடில் ஸ்கூல் தமிழாசிரியர் ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை யவர்கள் பாற் பெறலாம்.

**ஞானசம்பந்தம்:**— இது தருமபுர ஆதீனத்தில் 24-வது மகா சந்நிதானமாக வீற்றிருந்தருளும் உயர்திரு, ஷண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் 35-வது ஆண்டு நிறைவுவிழா நினைவு மலராக விசு ஆண்டு கார்த்திகைத் திங்களில் தொடங்கப்பெற்ற திங்கள் வெளியீடு. இதன் மலர் 1, இதழ் 1, வரப்பெற்றோம். மேன்மைகொள் சைவநீ[illegible]விளங்கவேண்டும் என்னும் பெருநோக்குடன் தங்க[illegible]வர் துள்ள ஆதீன கர்த்தரவர்களை தமிழுல[illegible]சைவ உலகமும் சீர்[illegible]போற்றற் பாலதே. சீரிய செர்

தமிழ் நடையில் பேரறிவாளர்களின் கட்டுரைகள் தாங்கி வெளிவரும் இத் திங்கட்டாளை அன்பர் பலரும் பெற்றுப்படித்து இன்புறுவார்களாக. ஆண்டுவரி உள்நாடு ரூ 1—8—0. வெளிநாடு ரூ 2—0—0. செயலாளர் 'ஞானசம்பந்தம்' காரியாலயம், தருமபுரம், மாயவரம் என்னும் முகவரிக்கு எழுதிப்பெறலாம்.

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ மெய்கண்டான் சித்தாந்த மகாநாட்டுக் கட்டுரைகளாகிய 'சிவஞான போதம்'; 'பொது அதிகாரம்'; பிரமாண இயல் 1, 2, 3, சூத்திரம்; இலக்கண இயல் 4, 5, 6 சூத்திரம், உண்மை அதிகாரம், சாதனஇயல்; ஏழாம்சூத்திரம், ஒன்பதாம் சூத்திரம், பயன் இயல், 10, 11, 12 சூத்திரம் ஆகிய வெளியீடுகளும் இன்னும் பல விரிவுரை வெளியீடுகளும் வரப்பெற்றுப் படித்து மகிழ்வுற்று மகாசந்நிதானம் அவர்களின் நன்றியைப்பாராட்டிப் போற்றுகின்றேம்.

திருவண்ணாமலை வரலாறு:— இது சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியதரிசி திரு, ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களால் எழுதப்பெற்று அருணாசலேஸ்வரர் தேவத்தான தர்ம கர்த்தர்களால் வெளியிடப்பெற்றது. விலை அணா ஒன்று.

நவமணிப் பிரபந்தம்:— இஃது கோட்டையூர் பிரமஸ்ரீ மீனாட்சி சுந்தரம் ஐயரவர்கள் புத்திரர் வித்வான் சுப்பிரமணிய ஐயரவர்களால் இயற்றப்பெற்று திருவாளர் கவீ. அழ. ராம. முத்தையா செட்டியார் அவர்கள்குமாரர் இராமநாதன் செட்டியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

இதுகோட்டையூர்சிவாலயத்துறையும் விநாயகர் கலிவெண்பா, சுந்தரேசர்மும்மணிமாலை, வெண்பாமாலை, ஸ்ரீமீனாட்சியம்மன் நான்மணிமாலை, பதிகம், வெண்பாமாலை, சுப்பிரமணியர், இரட்டைமணிமாலை, வெண்பா மாலை, திருமால் புகழ்வெண்பா மாலை ஆகிய ஒன்பது சேர்ந்ததால் இப் பெயர் சூட்டப்பெற்றது.

கந்த சஷ்டி மலர்:— பழநி ஸ்ரீ தெண்டாயுதபாணி தேவஸ்தானம் நிர்வாக அதிகாரி திரு, J. M. சோமசுந்தரம் பிள்ளையவர்களால் வெளியிடப்பெற்றது. கந்தபுராணச் சுருக்கமும் தத்துவமும் ஷை தேவத்தான வேத சிவாகமபாடசாலைப்பேராசிரியர் சிவஸ்ரீ ஈசானசிவாசாரியாரவர்கள் எழுதியதுடன் நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படையும் குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பாவும் சேர்ந்துளது.

தமிழர் சரித்திரச் சுருக்கம்:— இது திருச்சிராப்பள்ளி, தமிழக இளைஞர் மன்றத்தின் முதலாவது வெளியீடு. ஆக்கியோர் பண்டித, புலவ, வித்துவ ஞா. தேவநேசன் அவர்கள். இப்புத்தக அடக்கவிலை அணாஒன்று. இதில் சங்கத்தின் முற்கால, சங்ககால, இடைக்கால, தற்கால வரலாறு, களும் தமிழ் மன்னர் மரபு, திரவிடப்பிரிவு, நாகரிகப்பகுப்பு(பழக்க வழக்க ஒழுக்கங்கள்) ஆகியவை ஒப்பியன் மொழி நூலிலிருந்து சுருக்கிக் கூறப் பெற்றுள்ளன.

உ

## இராமநாட் சப் கோர்ட்டு. O. S. No. 109 of 1940.

ராம. கும. சு. குமரப்பசெட்டியார் — வாதி.
ராம. கு. ராம. ராமசாமி செட்டியார் — பிரதிவாதி.

ஷை நிம்பரில் பிரதிவாதி வணக்கமாயெழுதிக்கொண்ட மன்னிப்பு. இந்த நிம்பர் வாதியான ராம. கும. சு. குமரப்பசெட்டியாரை குறையாக அவதூறுசெய்து ஆக்கியோர் பெயரில்லாமல் தபாலில் வந்த ஒருபாட்டை தலைப்பகமும் பிற்குறிப்பும் நான் சேர்த்து எழுதி நான் பிரசுரித்துவரும் என்னுடைய சிவநேசன் 1-10-1939ல் வெளிப்படுத்திய தமுற்றிலும் தவறென்றுணருகிறேன். அதில் ஷை குமரப்பசெட்டியாரின் குறைகளாகக் குறிக்கப்படும் செய்திகள் ஒன்றும் உண்மையில்லை என்று அந்தப் பாட்டின் பொருளைப்புலவர்கள்விளக்கியபின் நான் அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

அதில் கண்ட குற்றங்கள் ஒன்றும் ஷை குமரப்பச் செட்டியாரிடம் இடையாது. ஆதலால் அந்த அவதூறுப்பாட்டு பிரசுரத்தை இதன்மூலம் தவறென்றுஒப்புக்கொண்டு வாபஸ்வாங்கிக்கொள்கிறேன். ஷை சிவநேசன் 1-1-1939 வெளியீட்டில் செய்திக்குறிப்பில் பலவான்குடி சிவன்கோயில் நிர்வாகத்தை ஷை குமரப்பசெட்டியார் சுயாலங்காருதி பெற்றுக்கொண்டது போலவும் அதை கிரமமாக ஒப்புவிக்க வகைதெரியாமல் கோர்ட்டு அமீனா எந்த சாயபு மூலம் ஒப்வித்தாரென்றும் நான் எழுதியது சரியல்ல. அவர் ஒழுங்காகவே நிர்வாகத்தை ஏற்று நல்லெண்ணத்தோடும் முறையாகவும் நடத்தியிருக்கிறார். பிறகுகோர்ட்டு டிக்கிரிப்படி அந்த டிக்கிரி வாதிக்கு வாங்கி ஒப்புவிக்கும்படி கோர்ட்டு உத்திரவு பிறந்து அதை நிறைவேற்ற வந்த அமீனா அழகர்சாமிநாயுடு இடம் கோர்ட்டு உத்திரவை உல்லங்கனம் பண்ணக்கூடாதென்று நினைத்து ஷை குமரப்ப செட்டியார் ஒப்புவித்ததும் சரி. அதற்குமாறாக நான் எழுதிய குறிப்பு பிசகு என்று உணர்ந்துவருந்துகிறேன். ஆகவே ஷை 1939 ஜனவரி 1ல செய்திக்குறிப்பாகவும், அக்டோபர் 1ல ஆசிரியப்பாவாகவும் ஷை குமரப்பசெட்டியாருக்கு கௌரவக்குறைவாகநான் வெளியிட்டதற்காக மனமாரமன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

ஷை ஆசிரியப்பாவில் கண்ட எவ்வித தீங்குகளும் இல்லாமல் எல்லா நலமும் ஆக்கமும் புகழும் எய்தி இனிது வாழும்படி இறைவன் அருளைப் பிரார்த்தித்து மனதார வாழ்த்துகிறேன்.

11—12—1941. ராம. கு. ராம. இராமசாமி செட்டி.

## நடுநிலையுடையவர் எழுதிய கடிதம். 23–7–40.

அறப்பெருஞ் செல்வர்களாகிய தங்கட்கும் தங்கள் குடிப் பெரியார்க்கும் வழக்குகள் நிகழ்வது என்போன்றார் தீயூழே யாகும். யான், தொடக்கமுதலே மனம் பதைத்து என் எளிய செயற்கு இயன்றனவெல்லாம் செய்து பார்த்தேன். இறைவனிடமும் வேண்டிக்கொண்டேன். என்செய்வது! நற்காலமில்லாது போயிற்று. இப்பால் இருவழக்கிலும் வென்றுள்ளீர்கள் என்பது கேள்வியுற்றேன். உங்கள் வெற்றியைப் பாராட்டி எழுத மனம் வந்திலது. என் எனில் வென்றதும் நீங்கள் தோற்றதும் நீங்களே யாதலின்; இரண்டுபக்கமும் செலவாவது உங்கள்பணமேயாதலின். இனியேனும் திருவருள் வீண் செலவும் உடல் வருத்தமும் நிகழா மல் அருள் செய்வதாக. பொருட் செலவையும் உடனலத்தையும் நன்கு நோக்கிவர வேண்டுகின்றேன்.

## ஆசிரியப்பாவின் அவதூறு வழக்கு.

இராமநாதபுரம் சப்கோர்ட்டு 1940-ம் ஆண்டு 109-வது வழக்கில் வாதி நோக்கிற் கிணங்கி வாதியை அடிவணங்கி அப்பாவை வெளிப்படுத்தியது முற்றிலும் தவறென்றுணர்ந்து மிகவும் வருந்தி மனமார மன்னிப்புக் கேட்டு வாழ்த்தி மன்னிப்பைப் பிரதிவாதி செலவின் பேரில் பத்திரிகைகளில் வெளியிட்டு மேலும் வாதிபேரில் தனித்தும் அவரைத்துணைக்கொண்டவரைச்சேர்த்தும் இந்தப்பிரதிவாதி தொடுத்துள்ள இரண்டு வழக்குகளை எதுவும் வேண்டாது விடுத்து வாதிக்கு அரை ஆயிரம் கொடுப்பதென்று அவ்வழக்கொழிந்தது. எக்காலத்திலும் மென்மையாக விட்டுக்கொடுக்கும் இயல்புடைய பிரதிவாதி தொடக்கமுதலே மாற்றம் வெளியிடவும் மன்னிப்புக்கேட்கவும் சற்றும் தயங்கினதில்லை. எவ்வாறுசெய்யவேண்டுமென்றுகேட்ட அப்போதே இப்படிச்செய்யவேண்டுமென்று இப்பரிசைப் பெற்றுக்கொண்டால் "மாட்சி வாய்ந்த மாகுமரப்ப, இன்னது புரிகுவையாயின் மன்னிவாழ்குவை" என்னும் பதங்களுக்குள்ள நல்லபொருள்களைமறைத்து "மாட்சி-மாளுதல், மா-விலங்கு, இன்னது புரிகுவையாயின்வாழ்வை இன்றேல் மாழ்வை" என்றெல்லாம் பொல்லாப்பொருள்கள் பொருத்த அவைகளைமறுக்க பிறரைத் துணைக்கொள்ளவோ பெரும் பணத்தையும் அருமையான காலத்தையும் விரையமாக்கவோ நேராதொழிந்திருக்கும். எல்லாம் பழநியாண்டியின்செயலே. சமரச உணர்ச்சி.

(கம்பைவாசி, தமிழ்ப்பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரையரவர்கள்)

இக்காலம் சிற்சில இடங்களில் தேவாலய விழாக் காலங்களில் சமயம் மொழி என்பன முன்னேற்றமடைதற்கான சொற்பொழிவுகள் நிகழ்தலைக் கேட்டு யாவரும் மகிழ்வடைகின்றனர். "பட்டி மண்டபம்" பாங்குடன் அமைந்திருந்த ஒரு காலமுமிருந்தது. பொதுவாகச் சமய ஒழுக்கங்களையும், கடவுளின் கருணைவிலாசமான வடிவங்களின் உண்மைப் பொருள்களையும் விழாக்காலங்களின் அன்றி விசேட நாட்களிலும் அறிஞர்கள் எடுத்துப் போதிப்பது அவசியம். எந்த இடத்தும் விரோத புத்தியைகாட்டயாவரும் முன்வரலாகாது. சிக்கலில் நடந்த சொற்பொழிவுகள் பல பயனுடைத்தாயிருந்தன. தலைவர் சொற்பெருக்கில் சிக்கலுண்டாய் விட்டது. குறிக்கோள் ஒன்றாக, "அவலை நினைத்து உரலை இடித்து விடல்" சாலாதல்லவா? சைவம் என்ற சொல்லுமா விரோதம்? சைவம் என்பதே திருமூலர், தாயுமானவர், சமயகுரவர், சந்தான குரவர் முதலிய உத்தம வித்தகர் என்றும் எங்கும் எடுத்தாண்ட சொல். தேவ மூர்த்தங்களின் சத்தி பேதங்கள் அறியாது சைவ நான் மரபு தோராது "வரயில் வந்தன வந்தன பன்னினர்" என்பதற்கு இலக்காகப் பேசுவது மரபாகாது. நாகாக்கக் கடமையுடையரே தலைவராதல் தகும். பொன்னில் செம்பைச் சேர்ப்பது நவநாகரீகமாயினும் சுத்த பொன்னாக இருப்பதற்கு மதிப்பு அதிகமே! ஆதலின் சமய உண்மைகளை விரோதநெறி பற்றாது நின்று பொது மக்கள் நலமுடைய ஏதுவாகச் சமயப்பணி புரிய அன்பர்கள் முன் வருவார்களாக. "சைவசமயமேசமயம்" இதனைச்சிந்திப்பார்களாக.



## அருட் பெருஞ் சோதி.

(கண்டாச்சிபுரம், திரு, அ. முத்தையபிள்ளை அவர்கள்)

எப்பொருளையும் விளங்கக்காட்டுவது ஒளி. கண்ணொளி கொண்டு புறப்பொருள்களை நோக்குகிறோம். அக்கண்ணுக்கு இயற்கையிலேயே ஒளிதரும் சக்தியில்லை. இருளில் பொருள்களைக் காணமுடியாததனால் இது புலன். இருளில் பொருள்களைக் காண வேண்டுமானால் மற்றோரொளிப் பொருள் வேண்டியிருக்கிறது. "இரு விழிகள் வாண்முகத்திலிருந்தாலும் வானிரவி யெழுந்தாலன்றிக், கருது நிலப் பல்பொருளுங் காண்டலரிதாம்" என்றார் பெரியோரும். சூரிய சந்திர அக்னியின் ஒளிச்சக்தியினாலேயே கண்கள் பிற பொருள்களை யறிகின்றன. அவை யின்றேல் எவையும் விளங்க மாட்டா. உலகில் மிக்க பெருஞ்சுடர்களாக சூரியன், சந்திரன், அக்கினி யென்னும் மூன்றும் விளங்குகின்றன. இம் மூவகைச் சுடர்களும் உலகிலுள்ள ஆன்மாக்கள் இயங்குதற் பொருட்டு இறைவனாற் படைக்கப் பட்டுள்ளன. முச்சுடரும் ஒரு சிறுபொழுதேனு மில்லையாயின் உலகம் நிலைகுலைந்துபோம். இம் மூன்றும் இறைவனது மூன்றுநோக்கங்களாக உள்ளன. அவனது நோக்கமில்லையேல் இவைகட்குத்தானே ஒளிதரும் சக்தியில்லாமற் போய்விடும். உலகேழ் எனத் திசை பத்தெனத் தான் ஒருவனுமே பலவாகி நின்ற பரமன் நிலம், நீர், நெருப்பு, உயிர் (காற்று) நீள்விசும்பு, நிலா, பகலோன், புலனாய மைந்தன் (அறிவுடைய ஆன்மா) ஆகிய எட்டு வடிவங்களாக விளங்குகின்றான் என்பர் மேலோர். இவ்வெட்டுருவங்களுள் மூன்று (நிலா, பகலோன், நெருப்பு) பேருருவங்கள் ஒளி தருவனவாகும். உலகுக்கு ஒளி அவசியமென்பது இதனால் விளங்கும். சந்திரன், சூரியன், அக்கினியாகிய மூன்றும் இறைவனது மூர்த்தங்களாகவும் கண்களாகவும் அமைந்த காரணத்தானே உலகு ஒளி பெறுகின்றது.

முன்னொருகால் இறைவி காதல் விருப்பு மீதூர் குறிப்பின் செம்மற் பிறை வேணியனார் திருக்கண் புதைத்து விளையாட்டயர்ந்தார். திருக்கண்மூடிய அச்சிறுபொழுது உலகுக்கு எண்ணில் பல்லூழியாயின. இருகண்களும் மூடப்பெறவே சூரிய சந்திரர்களாகிய இருசுடர்களும் மறைந்தன. மற்றோர் சுடராகிய தீக்கண் முக்கிய காரணத்தினாலன்றி எப்போதும் திறத்தலில்லை யாதலின்

முச்சுடருமின்றிப் புவனமுற்றும் இருண்டது. எண்திசையும் இருண்டன. என்றும் இருண்டறியாத விண்ணோர் இருக்கையும் (தேவருலகும்) இருண்டது. மண்ணுலகும் விண்ணுலகும் நிலை கலங்கின. தத் தம் யாக்கை நீர்மையும் காணாது பிறவிக்குருடர்போலானார்கள். படைப்பாதி தொழில்கள் தடைப்பட்டன. வேள்வி தவம் தானம் தேவபூசை கலவியின்பம் ஆகியனவின்றி உலகமெல்லாம் மயங்கின. அந்தகாரத்தை நீக்கியருளுமாறு இறைவனை இறைஞ்சி யோலமிட்டனர். இதனை யறிந்த பரம கருணாநிதியாகிய சிவபெருமான் பன்னிருகோடி சூரியரொருங்குதித்தாற் போலத் தனது நெற்றி விழியைத் திறந்தார். அந்தகாரம் அகன்றது. அம்மையாரும் திருக்கண் புதைத்த கைகளை வாங்கினார். வேள்வித் தீப்போல் மூன்றுகண்களும்விளங்கின. ஒளிபெருகியது. விண்ணும் மண்ணும் உவப்பெய்தின. இதனை,

"நாயகன் கண்ணயப்பால் நாயகி புதைப்ப வெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றி
தூயநேத் திரத்தினாலே சுடரொளி கொடுத்த பண்பில்
தேயமா ரொளிக ளெல்லாம் சிவனுருத் தேசதென்னார்".

(சித்தியார்)

"நலமலி மங்கைநங்கை விளையாடியோடி நயனத்தலங்கள் கரமா
உலகினை யேழுமுற்று மிருண்மூடமூட விருளோடநெற்றி யொருகண்
அலர்தர வஞ்சிமற்றை நயனங்கைவிட்டு மடவாளிறைஞ்ச மதிபோல்
அலர்தரு சோதிபோல வலர்வித்தமுக்கண வனாகமக்கோர் சரணே"

(தேவாரம்)

என்னும் அருண் மொழிகள் விளக்குகின்றன. இதனால் சிவபெருமானது திருக்கண்ணோக்கமே முச்சுடரொளி யென்பது தெளிவுறுகின்றது.

"சோதி யெவையும் விளங்க விளக்கும் சோதி வாழியே
துரிய வெளியில் நடுநின் றோங்கும் சோதி வாழியே"
"தேச விளக்கெலா மானாய் நீயே" (தேவாரம்)

என்னும் ஆன்றோருரைகள் எல்லாவிளக்கும் இறைவன் விளக்கமே என்பதை விளக்குகின்றன.

சிவபெருமானது திருவுருவம் அருட்பெருஞ்சோதியுருவமே. நெருப்பு தன்னை யடைந்த எப்பொருளையும் தன்மயமாக்கும்



தன்மைவாய்ந்தது. இறைவனும் தன்னையடைந்த அன்பர்களுக்குத் தன்னுணரவேண்டித் தனதருளைத்தான் கொடுத்து உதவுகின்றான். இறைவனது திருமேனி விளக்கத்தை அகத்தும் புறத்தும் கண்டு ஆனந்தித்த அன்பர்கள். பகல் போலும் பேரொளியான் 'சுடர் விட்டுளன் எங்கள் சோதி' 'கதிரைமறைத்தன்ன சோதி', 'சோதியே சுடரே' 'பரிதிவாழ் ஒளியாய்' 'தீமேனியானுக்கே சென்றாதாய்க் கோத்தும்பி' 'தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி' 'அவர்மேனி விளக்கமது எண்கடந்த மதி கதிர் செங்கனல் கூடிற் றென்னினுஞ் சாலாதே' 'தூண்ட வில்லாம லோங்குஞ் சோதி நல்விளக்கே' எனப் பாடிப்பாடி மகிழ்ந்துள்ளனர்.

இறைவன் திருமேனி வினைத் தீபம் போலாது மாசற்றசோதியாய் விளங்கும் மலர்த்தீபம். ஆகலின் மைபொதி விளக்குப் போன்ற குற்றமுள்ள நெஞ்சிற் குறிக்கொள்ளமாட்டாது. வினைத் தீப்பொருளுக்கு முதலும் முடிவும் உண்டு. இறைதிருமேனி "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி". ஒன்றும் பலவுமானது. எல்லாவுலகத்திலும் நீக்கமில்லாது நின்ற சோதி. கற்பனை கடந்த சோதி. துறந்தவர் உள்ளக்கமலமேவுஞ் சோதி. உள்ளொளி பெருக்குஞ் சோதி. பற்றற்ற மனத்தே, திரையற்ற நீர்போல் தெளிந்த அன்பர்மனத்தே, அருளே நிறைந்த சோதியாகத் தனிப்பெருங் கருணையாளனாக இறைவன் விளங்குவான். 'அருட்பெருஞ் சோதியகவல்' என்ற நீண்டதோரகவற் பாடி விளக்கும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் போன்ற மகான்களுக்கேயன்றி என்போலிய சிற்றறிவினர்க்கு அருட்பெருஞ் சோதியின் பெருமையை விரித்துக் கூறவியலுமோ?

இதுகாறும் கூறியவாற்றான், கதிராதிய வொளியின் உதவி பெற்றே கண்கள் புறப்பொருள்களைக் காண்கின்றனவென்றும், அக்கதிராதியவைகள் இறைவன் திருநோக்காலேயே ஒளிபெறுகின்றனவென்றும், இறைவனது மூன்றுகண்களுமே முச்சுடர்களெனவும், அவரது திருமேனியே பேரொளிப் பிழம்பென்றும், எவ்வொளியும் இறைதிருமேனி விளக்க ஒளிக்கு இணையாகாவெனவும், அத்தகைய பெருஞ்சோதியே மெய்யடியார்கள் இரந்திரந்துருக அன்பில் ஊன்ற தனிப்பெருங்கருணையுருவாக உள்ளொழுமென்றும் விளங்கப்பெற்றாம்.

வாழிய அருட்பெருஞ் சோதி!

உ

# கந்த சஷ்டி விரதம்.

இவ்விரதம் ஐப்பசிமீ வளர்பிறை (சுக்கிலபக்ஷம்) பிரதமை முதல் சஷ்டி வரை ஆறு நாளும் அநுட்டிக்கத்தக்கது. இது முருகப்பெருமானைக் குறித்து அநுட்டிப்பதாம்.

விரதமாவது, மனம் ஐம்பொறிகளின் வழியே போகாது நிற்கும்பொருட்டு ஆகாரத்தைச் சுருக்கியாவது முழுவதும் நீக்கியாவது மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேடமாக வழிபடுவதாம்.

இதில் ஆறுநாளும் முழுவதும் உணவின்றியிருத்தல் உத்தமம். அப்படியிருக்க இயலாதவர்கள் மா, பழம், பால், பானகம் முதலியன உண்டு வருதல் மத்திமம். அதுவும் இயலாதவர்கள் முதல் ஐந்து நாளும் ஒவ்வொரு பொழுது உண்டு, சஷ்டியன்று ஒரு நாளாவது விரதம் இருத்தல் வேண்டும்.

விரதத்திற்கு உபவாசம் என்பது பொருள். உப—சமீபம், வாசம்—இருத்தல் என்பது. அதாவது நமது மனம், வாக்கு, காயமென்னும் மூன்றும் இறைவனையே நோக்கி நிற்க, ஆன்மாக்கள் இறைவன் திருவடியிலே சிந்தையை வைத்திருத்தல் என்பதாம்.

விரதம் அநுட்டிப்பவர்கள் விடியற்காலையிலே எழுந்து, நதி குளம் முதலியவைகளிலே முழுகித் திருநீறுதரித்துக் கடவுளை வணங்குதல், செபம், பூசை, ஆலயதரிசனம், ஆலயத்தை வலம் வருதல், கடவுளுடைய குணமகிமைகளை விளக்கும் சொற்பொழிவுகளைக் கேட்டல் முதலியவைகளைச் செய்துகொண்டு, ஸ்ரீ ஞான தெண்டாயுதபாணியின் திருவடியிலேயே மனத்தைப் பதித்தல் வேண்டும். காமம், கோப முதலிய குற்றங்களை அறவே விடல் வேண்டும்.

இங்ஙனம் அநுட்டித்தவர்கள், நோய், வறுமை, கடன் முதலிய துன்பங்களிலிருந்தும் நீங்கி, ஆயுள், செல்வம், , மனைவி, புத்திரர்கள் என்னும் பேறுகளைப்பெற்று வாழ்ந்து பின்பு, முருகப்பெருமானுடைய திருவருளைப் பெறுவார்கள்.

(பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான வெளியீடு.)

உ

# திருக் கார்த்திகை.

(பழநி தேவஸ்தானம் வேதாகமபாடசாலை ஆசிரியர்,
சிவஸ்ரீ [illegible] சிவாசாரியர் அவர்கள்.)

உலகத்துக்குக் கர்த்தா சிவபெருமான். அவர் என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர் எல்லாம் வல்லவர்; உயிர்களாகிய நம்மிடத்துள்ள இரக்கமேதிருமேனியாக உள்ளவர். அவர், நம்மிடத்துவைத்த பெருங்கருணையினாலே, பிரமாவை நிலைக்களமாகக்கொண்டு படைத்தலும், விஷ்ணுவைக்கொண்டு காத்தலும், உருத்திரரைக்கொண்டு அழித்தலும் செய்வர். இவர்களுடைய தொழில் இவர்களுக்குச் சுதந்தரமன்று. இவர்கள் செய்த புண்ணிய விசேடத்தினாலே இறைவன் தமது ஆணையை இவர்கள் வாயிலாக நடத்துவர். அது, ஒரு அரசன் தமது ஆற்றலை [illegible] தானி, படைத்தலைவன் முதலாயினாரிடத்து வைத்து உலகத்தை நடாத்துதல் போலாம். அரச நீதிக்கு, அரசருடைய அணுக்கராகிய மந்திரி முதலாயினாரும் கட்டுப்பட்டு நடக்கவேண்டியது அவசியமாதல் போல, இறைவனை யடுத்துவணங்கும் பிரம விஷ்ணுக்களும் இறைவனுடைய பேராணைக்கு அமைந்தே நடத்தல் வேண்டும். எத்துணைப்பெரிய ஆணை செலுத்துவோரும் அகங்கார வசத்தராயின், விரைவில் தனது வலியிழந்து கீழ் நிலையையடைவர்; இந்த உண்மையை ஒவ்வொரு சமயங்களில் மக்கள் மறந்துவிடுதல் போல, பிரம விஷ்ணுக்களும் மறந்தனர். திருமாலானவர் எல்லா வுயிர்களையும் பாதுகாக்கும் திதித் தொழிலுக்குத் தாமே மேலான தலைவரென்றும், தமது எண்ணத்தின்படியே எண்ணிறந்த பிரமர்களைத் தோற்றுவிக்கத் தமக்குத் தகுதியுண்டென்றும், தாம் காவாவிடின் உலகம் ஒரு கணப்பொழுதும் நிலைபெறுவென்றும் எண்ணித் தருக்கு மிகுந்து கூறினர். அதுகேட்ட பிரமாவானவர், சிருஷ்டித்தொழிலுக்குத் தாமே முழுமுதல்வரென்றும், விஷ்ணுவின், பத்து அவதாரங்களையும் தாமே படைத்தவரென்றும், மகாவிஷ்ணு ஒரு காலத்தில், தூணில் நின்று தோன்றியபோது அந்த நரசிங்கத்துக்குத் தூண் தந்தையாகாதவாறு போலத் தாம் விஷ்ணுவின் உந்தியினின்று தோன்றினமைபற்றித் தமக்குத் திருமால் தந்தையல்லரென்றும்எண்ணித் தமது தலைமைத் தன்மையைத் தாமே வியந்து பாராட்டிக்கொண்டு திருமால் கூறியவற்றை மறுத்தனர். இதனால் இருவருக்கும் பெரிய விவாதம் நிகழ்ந்தது. இவ்விருவர்களுக்கு மத்தியில் ஒரு அனல் பிழம்பாக இறைவன் தோன்றி "இந்த நெருப்புப் பொறியின் அடியையும் முடியையும் எவர் காண்கின்றார்களோ அவரே பெரியவர்" என்று கூறியருளினர். அதுகேட்ட பிரம விஷ்ணுக்கள் தமது தேவ வடிவத்தை விட்டு, அன்னப்பறவையாயும், பன்றியாயும்

வடிவெடுத்தும், மேலுங் கீழுந் தேடினர். "யாவர்க்கினும் அன்பரன்றி மற்றறியொணா மலர்ச்சோதியான்" "இத்தந்திரத்திற் காண்டுமென்றிருந்தோர்க், கத்தந்திரத்தின் அவ்வயின் ஒளிப்பவனன்றோ அவர்? பன்றிக் குட்டிக்கும் பரிந்து முலை சுரந்தளித்த தாயைப்போற் பராமரித்த, சென்றடையாத திருவுடையான்—அல்லனோ? ஆதலால், அவ்விருவர் நடுவிலே தோன்றிய பேரொளிப் பிழம்பே வடிவாகிய சிவபெருமானே சிருஷ்டி முதலிய தொழில்களுக்கு ஒப்பற்ற தலைவனென்பதனை உலகோர் அறிய ஒரு நெருப்புப் பிழம்புவடிவான மலையாகக் காட்சி தந்தனர்; அத்திருமலையைத் தான் திருவண்ணாமலை என்று வழங்குவர். அங்ஙனம் அனல் பிழம்பு வடிவாகக் காட்சி தந்த தினமானே திருக்கார்த்திகைத் திருநாளாகும். இந்த நாளிலே, திருக்கோயிலுக்குச் சென்று தங்களால் இயன்றவாறு பசுநெய், எண்ணெய் முதலியவைகளினால் திருவிளக்கேற்றுவித்தும் வழிபாடுசெய்தும் போற்றுவோர் எல்லாத் துன்பமும் அஞ்ஞானமும் நீங்க, மெய்ஞ்ஞான விளக்கம் பெறுவர்.



இனி, முருகப்பிரானுக்கு இத்திருநாள் சிறந்த திருநாளாகக் கொள்வதற்குள்ள சரிதத்தைச் சிறிது கூறுவாம்: முன்பு ஒரு காலத்தில், சூரபன்மன் முதலிய அவுணர்கள் துன்பத்துக்கு, ஆற்றாத தேவர்கள் சிவபெருமானிடத்தில் சென்று தங்கள் துன்பத்தை நீக்கியருளுமாறு வேண்டினர். அவர்கள் துன்பம் நீங்கும் வண்ணம் தமது திருக்கண்களினின்று ஆறு நெருப்புப் பொறிகளைத் தோற்றுவித்து வாயுதேவனையும், அக்கினி தேவனையும் நோக்கி "இந்நெருப்புப் பொறிகளைக் கங்கையில் விடுங்கள்" என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தனர். அவர்கள் அங்ஙனமே சென்று கங்கையில்விட, கங்கை வறண்டது கண்டு சரவணப் பொய்கையில் விட்டனர். அந்த நெருப்புப்பொறிகள் ஆறும் ஆறுகுழந்தைகளாக, கார்த்திகைப் பெண்கள் அறுவரும் அவ், ஆறு குழந்தைகளுக்கும், தமது திருமுலைப் பால் ஊட்டி வளர்த்தனர். அடியவர்கள் அன்பு நுகர்ந்தருளும் பெருமான், தம்முன் ஒரே தன்மையான அன்புடைய அவ்வறுவரும் ஒப்பமகிழுமவண்ணம் ஆறு குழந்தைகளாய் அவருடைய திருமுலைப்பாலையுண்டருளினர். பிரம விஷ்ணு முதலிய தேவர்களும் கண்டு அஞ்சத்தக்க பல திருவிளையாடல்களை அவ், ஆறு குழந்தைகளும் செய்தன. உயிர்களிடத்துள்ள கருணையின் விளைவான அவ், ஆறு குழந்தைகளின் குண மகிமைகளைச் சிவபெருமான் உமாதேவியாருக்குக் கூறியருளி, உமாதேவியாருடன் தாமும் சரவணபொய்கையிற் சென்று உமாதேவியார் தமது திருக்கரத்தால் ஆறு குழந்தைகளையும் ஒருசேர, எடுத்தணைத்தனர். ஆறு குழந்தைகளும் ஆறுமுகமும் பன்னிரு திருக்கரங்களுமுடைய ஒரு திவ்விய வடி-

## சிவாலய தரிசன முறை.

ஆலயத்தைச் சமீபித்தவுடன், கோபுரத்தை வணங்கி, நந்தி, மயில் வாகனம் கொடிமரத்துக்கு இப்பால் வணங்கி, வலம் வந்து, உள்ளே சென்று தோத்திரங்களைச் சொல்லி மனம் கசிந்துருக வழிபட்டு, அர்ச்சனை முதலியன செய்வித்துத் திருநீறு பெற்றுத் திரும்பல் வேண்டும்.

ஆலயத்திலே சென்று கடவுளை வழிபடுகின்றவர்கள். குளித்துத், தோய்த்துலர்ந்த ஆடை உடுத்து திருநீறு தரித்துக்கொண்டு அர்ச்சனை அபிஷேக முதலியவற்றிற்கு வேண்டும் பொருள்களை எடுத்துக்கொண்டு செல்லல்வேண்டும்.

## திருக்கோயிலிலே செய்யத்தகாத குற்றங்கள்.

ஆசாரமில்லாது போதல், கால்கழுவாது போதல், எச்சில் உமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குநீர் சிந்துதல், பாக்கு வெற்றிலை போடுதல், உயர்ந்த இடத்திலே உட்காருதல், (நந்தி பலிபீட முதலியன அமைக்கப் பெற்ற இடத்திலே உட்காருதல்) ஆசனங்களிலே இருத்தல், தூங்குதல், படுத்துக்கொண்டிருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர் கோதி முடித்தல், சிரசிலே தலைப்பாகை தரித்தல், தோளிலே வஸ்திரம் போட்டுக் கொள்ளுதல், போர்த்துக்கொள்ளுதல், நிருமாலியத்தை மிதித்தல், வீண் வார்த்தை பேசுதல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சூதாடல், சுவாமி (பலி பீடம், நந்தி, இடபம், மயில்) என்னும் இவர்களுக்குக் குறுக்கே போதல், ஓடிவலம் வருதல் முதலியனவாம். இத்தகைய குற்றங்களை ஒரு பொழுதும் மறந்தும் செய்யலாகாது. இத்தகைய குற்றங்களைச் செல்வம், அதிகாரம், இடம்பம், செருக்கு முதலியவைகளினாலே திருக் கோயிலிலே செய்யப்புகுவோர் பெருங்கொடும் பாவத்துக்கு ஆளாவர். திருக்கோயிலிலே சென்று கடவுளை வழிபடுதலாகிய புண்ணியத்தைத் தேடவந்தவர்கள் அங்கேபோய் மேலே காட்டிய பாவங்களை செய்வது, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதற்கொப்பாகும்.

## திருப்புகழ்.

பிறவியலை யாற்றினிற் புகுதாதே
  பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
  உனதுபத காகிதியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
  அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
  குமரகுரு கார்த்திகைப் பெருமானே.

---

உ

# சர்வாதிகாரிகளின் உயிரைப் பறிக்கும் ஒப்பற்ற வீரர்கள்.

(நல்லிபாளையம் திரு, அ. சிவப்பிரகாசையரவர்கள்.)

சிலவாண்டுகட்குமுன்னர் வியன்னாவிலிருக்கும் புகழ்படைத்த அபேரா மாளிகையினருகில் ஓர் நாள் மாலை அழகிய தமியங்கி (Motor) யொன்று வந்து நின்றது. விலை உயர்ப்பெற்ற அத்தமி யங்கியின் முன்னும் பின்னும் மும்மூன்று தமியங்கிகளிருந்தன. அவற்றில் சிவப்பும் நீலமுங் கலந்த மெல்லாடை யுடுத்துக்கரங்களில் ரிவால்வாரைப் பிடித்துள்ள அநேகஇளைஞர்களிருந்தனர். அவர்களை நோக்கின், அவர்கள் யாரோ ஓர் பெரிய சக்கரவர்த்தியின் மெய்க் காப்பாளர் எனத் தோன்றினர். அத்தமியங்கியில் அதிக விலை யுள்ள ஆடையணிகளால் விளங்கும் ஒருவன் அமர்ந்திருந்தான். தமியங்கி நின்றவுடன் அவன் புன்முறுவலுடன் அபேரா மாளி கையை நோக்கிப் புறப்பட்டான். சுற்றியிருந்த மாந்தர் பெரு மகிழ்வுடன் நோக்கத் தொடங்கினர். எவனோ ஒருவன் மற்றொருவ னுடைய செவியில் "இவன்தான் அல்பேனியாவின் அரசனான ஜோக்" என்று மெதுவாயுரைத்தான். இவ்வுரை மெல்ல மெல்ல அங்கிருந்த எல்லோருக்கும் பரவிற்று.

திடீரென்று அக்கும்பலிடையே இரண்டுஅல்பேனிய வாலிபர் எழுந்தனர். அவர்கள் கைகளில் இரு ரிவால்வார்களிருந்தன.

"பட், பட்" என்ற ஒலிகேட்டது. பேரரசனின் மெல்லுடல் நிலமேலுருண்டது. மக்களெல்லோரும் சவத்தைக் காண ஓடிக் கொண்டிருந்தனர். மற்றுஞ் சிலர் "இம்மன்னன் மாண்டதால் நமக்கு லமெய்தியது" என்றனர். ஆயினும் அதே சமயத்தில் அபேரா மாளிகையின் ஒரு பக்கத்தில் தன் தூதனொருவனால் இரு இளைஞரின் செயலைக் கேட்டுக்கொண்டே யமர்ந்திருந்தான் ஜோக் வேந்தன். உண்மையில் மாண்டவன் ஜோக்கரசனன்று; அவனுடைய ஒப்புருவினன்.

இவ்வாறுதான் ஒவ்வொரு சர்வாதிகாரியினுடையதும். அவர்கட்குப் பகைஞரின் அச்சம் எக்காலமுமிருக்கின்றது. இத்

தகைய பிராணாபாயத்தினின்றும் தப்புதலின் பொருட்டு இவர்கள் தம் நாட்டில் தம்மைப்போன்றே அங்க அடையாளம், குரல் முதலியவற்றைக் கொண்டுள்ளவர்களை மெய்க்காப்பாளர்களாக நியமித்திருப்பர். அவர்களைக் கண்டு சர்வாதிகாரிகளின் நண்பரும் மயக்கத்திற்குள்ளாவர். சர்வாதிகாரிகள் இவ்வொப்புருவினரின் உயிரைப் பலியிட்டுத் தம்முயிரைக் காத்துக் கொள்ளுவர். இவர்கள் சர்வாதிகாரிகளின் மெய்க்காப்பாளராதியோராக இருந்து வருவர். அவர்களின் குலமுதலியவை யாருக்கும் தெரிவதில்லை.

ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லரின் ஒப்புருவினர் பலருண்டு. முதன்முதலில் இவனது தமியங்கியோட்டியாய் இருந்த ஜூலியஸ் ஸ்ரேகன் என்பான் ஒப்புருவினனாயிருந்தான். ஓர்நாள் ஹிட்லர் பர்லினினின்று ஜப்பானிற்குப் போகவேண்டியதாயிற்று. ஸ்ரேகன் கரிய தலையணியை யணிந்து வண்டியைச் செலுத்தினான். பின்புறம் கண்களை மூடிக்கொண்டு சயனித்திருந்தவன் போன்று ஹிட்லர் காணப்பட்டான். யாரோ ஓர் நாஜிப் பகைஞன் ஹிட்லரின் மேலே குண்டை எறிந்தான். குறி சரியாயிருந்தமையின் அவன் வண்டியுள்ளேயே உயிரைத் துறந்து விழுந்தான். ஆயினும் தமியங்கி நிற்கவில்லை. போக வேண்டிய இடம் போயின பின்பு, தமியங்கியினை நிறுத்திக் கீழே இறங்கி தன் தலைப் பாகையை ஆனந்தத்துடன் காற்றிலாட்டிக்கொண்டு, புன்னகையோடு பிணத்தைப் பார்த்து, கவலையைக்காட்டி, வீட்டினுள் நுழைந்தான் வண்டி யோட்டி. அவன்தான் ஹிட்லர்!

இரஷ்யாவின் மக்கள் மிகவும் வன்மையுடையவரும், இன்ப நுகர்வோருமாவர் என்று எண்ணப்படுகின்றனர். ஸ்டாலினை அவர்கள் ஈசனைப்போல் பூசிக்கின்றனர். எனினும் அவனுக்குத் தன் நாட்டில் அச்சமின்றி வெளியே வரும் தைரியமில்லை. அவனுடைய மாற்றலர் அவனைத் தொலைப்பதற்காகத் தொடர்ந்து கொண்டே இருப்பர். ஆயினும், சதுரனாத ஸ்டாலின் எல்லோரின் கண்ணிற்கும் மண்ணைப்போட்டு விடுவான். ஒரு அதிசயம் கேளுங்கள்.

அமெரிக்காவின் பெயர்பெற்றபத்திரிகைஉத்தியோகத்தினனான மி. லார்ஸ்கார் என்பான் ஓர் தினம் மாஸ்கோவின் இரெட்ஸ்க்வெர்



மைதானத்தில் நின்று இரஷ்ய சேனா வீரரைக் கவனித்துக்கொண்டிருந்தான். எதிரில் லெனின்னின் சமாதியினை எண்ணற்ற இரஷ்யர் சுற்றிக்கொண்டிருந்தனர். ஸ்டாலின் பிரசங்கஞ் செய்துகொண்டிருந்தான். அது முடிந்த பின், அவன் தமியங்கியிலமர்ந்து புறப்பட்டான். உடனே குண்டின் சப்தங்கேட்டது. ஸ்டாலின் மீது குண்டு பாய்ந்துவிட்டது. அவனைப் படுக்கச்செய்து தமியங்கி சென்றது. செல்லும்போதே மி லார்ஸ்கார் கண்டது யாதெனின், லெனின்னின் சமாதியருகே மெய்க்காப்பாளர் எண்மரின் இடையே ஸ்டாலின்தான் வசிக்கும் க்ரம்லினை நோக்கிச் சென்றதை. தமியங்கியிலுயிர் விட்டவன் அவனுடைய ஒப்புருவினன்.

இத்தலியின் சர்வாதிகாரி மாத்திரம் இதனை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஆயினும், அவனுக்கும் ஒப்புருவினன் இல்லாமலில்லை. 1923-ல் அவன் மோட்டாரில் நேப்பிள்ஸ் பக்கம் போய்க்கொண்டிருந்தான். அவனைச் சிலர் கொலைபுரிய வேண்டுமென்றிருந்தனர். அவர்கள் ''டியூஸை'' வலிவுடனடித்துக் கொன்றனர். ஆயினும் பின்புறமிருந்து காவலாளிகள் வந்தமையான் எல்லோரும் ஓட்டமெடுத்தனர். பின்னர் பார்க்க அவ்வாறு மாண்டவன் முசோலினியாயில்லாமல் அவனுடைய ஒப்புருவினனாயிருந்தான்!

ஜப்பானின் முந்தின முக்கியாதிகாரியாயிருந்த அட்மிரல்ஒகாடின் ஒப்புருவினன் டெக்கோ மஸ்லே. ஒரு தினம் பத்திரிகைகளில் அவனுடைய மரணத்தைப் பற்றிக் கொட்டைஎழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அரசாங்கம் அதனைப் பொய்யென்று வெளிப்படுத்திற்று.

இவ்வாறாக மாந்தரை இரக்கமின்றிக் கொடுமையுடன் காணும் சர்வாதிகாரிகள் சாவினச்சத்தால் இரவு பகலாய் எண்ணமிட்டு தம்முயிரைக் காக்கக் கருதி தம்மையொத்திருக்கும் நிரபராதிகளான ஒப்புருவினரைப் பலிகொடுக்கின்றனர்.

187006

உ

# சிவசோதி இயல்.

(புதூர்சங்கம் பிரசங்கமணி, அ. இராஜம் பிள்ளையவர்கள்.)

கண்ணிற் சிறந்த உறுப்பில்லையென்பது ஆன்றோர் வாக்கு. எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனுக்கு கண்களாகவிளங்குபவை மதிகதிரனல் என்னுமூன்றுமாம். ஒருகால் உமையம்மையார் தம் நாயகன் இருகண்களையும் விளையாட்டாக மூடினர். மூடினதும் உலகெங்கணும் இருள்பரவிற்று. உயிர்களனைத்தும் துன்பக் கடலிற்றோய்ந்தன. தடங்கருணைப்பரமன் உயிர்கள்படுந்துன்பத்திற் காற்றாதவராய்த் தமது நுதற்கண்ணைத் திறந்தனர். திறந்ததும் உலகத்தைச்சூழ்ந்த இருள் பறந்தது; உயிர்களும் இன்புற்றன. இக் கதையால் கதிர்மதி அனலாகிய முச்சுடர்களும் ஆண்டவன் வல இடநுதல் விழிகளென்பதும், அவைகளின் ஒளியின்றி உலகம் இயங்காதென்பதும் தெளிவாகின்றன.

"நாயகன் கண்ண யப்பால் நாயகி புதைப்ப வெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்தல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தினாலே சுடரொளி கொடுத்த பண்பில்
தேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னார்."
(சிவஞானசித்தியார்.)

இனி ஐவகைப் பூதங்களுள் ஒன்றாகிய கனல் மாத்திரம் சிறந்து விளங்கும் உண்மையைச் சிறிது ஆராய்வாம். சத்துசித்து ஆனந்தமாக விளங்கும் பரம்பொருட்குரியமூர்த்தங்கள் எட்டாகும். அவை மண், புனல், கனல், காற்று, வெளி, கதிர், மதி, உயிர் என்பன.

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ." (திருவாசகம்)

இவ்வெட்டு மூர்த்தங்களுள் அனல் மாத்திரம் நான்கு மூர்த்தங்களாக மிளிர்கிறது. ஐம்பூதங்களுள் ஒன்றாய்த் திகழ்வதும் அனல். சூரியசந்திரரும் அக்கினித் தொடர்புடையார். உயிரும் சிற்சத்தியாகலான் அக்கினிக் கூறுடையதே. சந்திரனை நீர்மண்டலமென்றும், உயிர் சிற்சத்தி யொளிப்பொருளல்ல வென்றும், கூறுநர்



களுமுள. இன்னணம் அனல் கடவுளுக்கு நான்கு மூர்த்தங்களாக இலங்கலான்,

"சோதியே சுடரே சூழொளி விளக்கே......" எனத் திரு திருவாசகமும்,

"தேனோக்குங் கிளிமழலை யுமைகேள்வன் செழும்பவளம்
தானோக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை......."

எனத் தேவாரமும்,

"இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு
ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ..." எனத் திருவிசைப்பாவும்,

"பேசாப் பிரமமடி பேச்சிறந்த பேரொளி காண்
ஆசா பசா சங்க ளணுகாத பேரொளிகாண்......எனப்பட்டினத் தடிகள் பாடலும்,

"அலகில் சோதிய னம்பலத் தாடுவான்..........." எனப் பெரிய புராணமும் இறைவனை உருத்திராக்கினி யெனவும், பரஞ்சுடரெனவும், சிவசோதியெனவும், விளிக்கின்றன. இன்னும் சிவபெருமான் தழல் வண்ணன் என்பதை விளக்குஞ் சான்றுகள் பலவுள. அவை விரிக்கிற்பெருகும்.

இனிப் பூதாக்கினிக்கும் சிவபரஞ்சுடருக்குமுள்ள இயைபுகளைச் சிறிது விளக்குவாம். அக்கினி தன்னையடையும் பொருள்களின் மாசு நீக்கி அவைகளைத் தன்மயமாக்குவதுபோல் இறைவனும் தன்னையடையும் ஆன்மாக்களின் மலவிருளைத் தடிந்து தன்வயமாக்குவன்.

"இந்தனத்தி னெரிபாலி னெய்பழத்தி னிரதம்
எள்ளின்க ணெண்ணெயும்போ லெங்குமுள னிறைவன்
வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவே யருளும்
மலமறுப்போ ரான்மாவின் மலாடி ஞானத்தாற்
சிந்தனைசெய் தருச்சிக்கிற் சிவனுளத்தே தோன்றித்
தீயிரும்பைச் செய்வதுபோற் சீவன் றன்னை
பந்தனையை யறுத்துத்தா னாக்கித்தன் னுருவப்
பரப்பையெலாங் கொடுபுகுந்து பதிப்பவனின் பாலே."
(சிவஞானசித்தியார்.)

அனல் அருவாகவும் உருவாகவும் ஒளிர்கின்றதுபோல் அரனும் அருவாகவும் உருவாகவும் ஒளிர்கின்றான். அனல் ஒன்றைப்பற்றித் தன் விளக்கத்தைத் தோற்றஞ் செய்வதுபோல் சிவபிரானும் உறவு கோல் நட்டு உணர்வென்னுங்கயிற்றினால் முறுகவாங்கிக் கடையும் சிவஞானிகள் அறிவினிடந் தன் விளக்கத்தைத் தோற்றஞ் செய்வன்.

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே." (தேவாரம்)

அனல் ஒன்றே பல விளக்குகளாக விளங்குவதுபோல் சிவமொன்றே பல மூர்த்தங்களாக விளங்கும்.

"ஒன்றவன் றானே யிரண்டவ னின்னருள்
நின்றனன் மூன்றினு ணான்குணர்ந் தாறினைந்து
வென்றனன் ஏழும்பர்ச் சென்றனன் றானிருந் தானுணர்ந் தெட்டே." (திருமந்திரம்)

அனல் சூக்குமபூதமாகிய ஆகாயம் தூலபூதங்களாகிய மண் புனல் தீ காற்று என்னுமிவைகளில் ஊடுருவிப்பாய்ந்து நீக்கமறக்கலந்தும், அவைகளைக் கடந்தும், நிற்பதுபோலச் சிவமும் சராசரங்களோடும் நீக்கமறக் கலந்தும் அவைகளைக் கடந்தும் ஒளிர்கின்றது. அவ் வியல்பு பக்குவமுறாத ஆன்மாக்களுக்குப் புலனாகாது. அவைகளுக்குச் சிவம் காடாகவும் மலையாகவும் கடலாகவும் தோன்றும், சீவன்முத்தர்கட்கு அங்கிங்கெனாதபடி யாவும் சிவமயமாகத் தோன்றும். இத்தகைய சிவத்தைக் கண்டு இன்புறவேண்டில் காயத்தையேகோயிலாகவும், கடிமனத்தையே தகழியாகவும் நேய வுணர்வையே நெய்யாகவும், உயிரையே திரியாகவும் கொண்டு ஞானவிளக்கேற்றினால் ஆணவமகலும் சிவசோதிவிளங்கும்.

"உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.
(தேவாரம்)

திருச்சிற்றம்பலம்.

௧.

# தென்னிந்தியப் புலவரும் அவர்தம் நூலின் நயமும்.

(சென்னை, திரு, க. மு. துரைசாமி யவர்கள்.)

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை..." —பாரதியார்.

விரிகடல்சூழ் வியனுலகின்கண் விளங்கும் எண்ணிலா மொழிகளிலே நம்தாய் மொழியாம் தமிழ் மொழியும் ஒன்றாகும். இத்தமிழ் மொழி தோன்றிய காலம் இற்றைக்குப்பத்தாயிர ஆண்டுகட்குமுன் என ஆராய்ச்சியாளர் அறுதியிட்டு அறைகின்றனர். இத்தகைய சிறப்புப்பெற்றமொழியில் ஒல்காப் பெரும் புகழ் படைத்த பாவலர்கள் பலர் பரவியிருந்தார்கள். அத்தகைய பாவலர்களில் சிறந்தவர் கம்பரும், திருவள்ளுவரும், இளங்கோவடிகளுமே என மேலே விளக்கும் பாவினால் பாரதியார் பகர்கின்றார். இம்மூவரிலும் பன்னூற்றாண்டுகட்கு முன்பு வாழ்ந்தவரும், பின் உள்ள கம்பராலும் இளங்கோவடிகளாலும் பாராட்டப்பட்டவரும், திருக்குறளென்னும் தெள்ளிய தமிழ் மறையைத் தமிழ்நாட்டவர்க்கு தந்தவருமான திருவள்ளுவரே சிறந்தவராவர்.

நமது தமிழகத்தின்கண் வாழ்ந்த புலவர்களும், புரவலர்களும் அவர் தம் வரலாற்றினை முறையாக எழுதிவைக்கும் வழக்கம் இன்மையால், அன்னாரின் வரலாற்றுகளை அவரியற்றிய நூலினின்றும் அன்னார்மேல் பிறரியற்றிய செய்யுட்களினின்றும் ஒருவாறு அறியலாம். அவ்வரலாறும் உண்மையானது எனக் கூற இயலாது. ஆகவே யான் இக்கட்டுரையில், முதலில் முதற் பாவலராகிய திருவள்ளுவரைபற்றியும், பிறகு கற்பனைக் களஞ்சியமாம் கவியரசர் கம்பர் பெருமானைப்பற்றியும், அதன்பின் இணையற்ற சிலப்பதிகாரத்தை யருளிய இளங்கோவடிகளைப்பற்றியும் எனது சிற்றறிவிற்கு எட்டியவாறு சிறிது கூறியுள்ளேன். குற்றங்குறைகள் இருக்குமேல் பொறுத்தருளுக.

## திருவள்ளுவர் வரலாறு.

வள்ளுவனார் ஆதி என்னும் புலைச்சிக்கும், பகவன் என்னும் பார்ப்பனருக்கும் பிறந்தவரென்றும், இவருடன் பிறந்தவர் கபிலர், அதிகமான் என்னும் ஆண்பாலாரிருவரும் ஔவை, உப்பை, உறுவை, வள்ளிஎன்னும் பெண்பாலர் நால்வரும்என்றும், இவருடையபெற்றோர்ஒவ்வொருகுழந்தையையும் பிறந்தவுடன் அங்ஙனமே விட்டு விட்டுச்சென்றதாகவும், பிறகு ஒவ்வொரு குழவியும் ஆண்டவனருளால் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொருவரால் வளர்க்கப்பட்டனவென்றும், அங்ஙனம் வளர்ந்தவர்களில் நமது வள்ளுவனார் மயிலையில் வளர்ந்ததாகவும், நெய்தல்தொழில் செய்து தம்மில்லாளுடன் இல்லறநெறியை தாமியற்றிய திருக்குறளிற் கூறியாங்கு நடத்

னரெனவும், கர்ணபரம்பரையாய் வழங்கும் ஒரு வரலாறு கூறுகின்றது. ஆனால் இப்பொழுது ஆராய்ச்சியாளர், பண்டைக்காலத்தே அரசருக்கு மந்திரத் தொழிலைச்செய்பவரும், அரசருக்கு நிகழக்கூடிய நிகழ்ச்சிகளை முன்னர்க்கூறுபவரும், யானைமீதேறிப் பறையறைந்து மக்களுக்குஅரசனது ஆணையை அறிவிப்பவருமாகிய வள்ளுவர் குடியிலே நமது திருவள்ளுவனார் தோன்றியவரென்றும், இவரது இயற்பெயர் மறைந்து குலப்பெயரே காரணப் பெயராயிற்றென்றும், மற்றும் இவருடன் பிறந்தவரெனக்கூறும் ஔவை, கபிலர், அதிகமான் முதலியோர் தாம் பாடிய புறநானூற்றுச் செய்யுள்களில் தம்முடன் பிறந்தாரைப்பற்றி யாதொரு செய்தியும் கூறாதிருத்தலாலும், எழுவரில் உப்பை, உறுவை, வள்ளி என்னும் மூவரும் மற்றைய நால்வரைப் போன்று யாதொரு செய்யுளும் நூலும் இயற்றாமை பற்றியும், இவரனைவரும் ஒரு தாய் தந்தைக்குப் பிறந்தவரல்லரெனக் கூறுகின்றனர். எது எவ்வாறாயினும் "எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற் கற்றோரைமேல் வருக" என்பர். என்றாங்கு வள்ளுவனாரின் மதத்தையும் சாதியையும் பாராமல் அவர் தமிழ்நாட்டினருக்குத் தந்துள்ள ஒப்பிலா மணியைக்கொண்டு அவரது உள்ளத்தையும், நூலின் நயத்தையும் ஆராய்தல் வேண்டும். இப்புலவர் கோமானுக்குப்பத்துக்காரணப்பெயர்கள் காண்பது போன்று இவரியற்றிய நூலிற்கும் பத்துச் சிறப்புப் பெயர்கள் விளங்குகின்றன.

காலம்:—இப்புலவர் கோமானின்காலம் சற்றேறக்குறைய ஆயிரத்துத் தொள்ளாயிரம் வருடங்கட்கு முன் என ஆன்றோர் அறைகின்றனர்.

நூற்சிறப்பு:—நம் வள்ளுவனார் இயற்றிய திருக்குறள் எந்நாட்டவர்க்கும், எம்மதத்தவர்க்கும் எக்காலத்திலும் தகுதிவாய்ந்ததாய் வாய்த்திருத்தலால் பலரும் அதனைப் பொன்னேபோல் போற்றுகின்றனர். இந்நூல் பல நூற்பொருளையும் தன்னகத் தடக்கியுள்ளதெனப் பகரலாம் "திருக்குறளை ஆராய்ந்தால் அதன்கண் உலகமிருத்தல் நன்கு புலனாகும். திருவள்ளுவர் உலகையே திருக்குறளாக எழுதினார். உலகின் எழுத்தோவியம் திருக்குறள் என்று கூறலாம்" என்று திரு. வி. க. அவர்கள் தாமெழுதிய பாயிர உரையிலே எழுதியிருப்பதனாலும் அறியலாம். பல அரிய கருத்துக்களையும் எழுசீரமைந்த குறளிலே இயற்றியருளிய நமது வள்ளுவனாரின் பெருமையே பெருமை! அரிய குறளை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்த ஜி. யு. போப் என்னும் துரைமகனார் "தமிழ் நாட்டவர் ஒழுக்கத்திற் சிறந்திருப்பதற்குக் காரணம் திருக்குறளும், நாலடியாருமே" எனக் கூறியுள்ளாராயின் திருக்குறளின் பெருமையைக் கூறவும் வேண்டுமோ? இதுவரை இம்மதருமைக் குறள் சுமார் பதினாறு மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இந்நூல் தோன்றிய அன்றுமுதல் இன்றுவரை இதன் குறள்களை தாம் இயற்றும் நூல்களிலே எடுத்தாளாத புலவரில்லை என்று கூறலாம். இன்னும் இதன் சிறப்பியல்புகளை பக்கம் பக்கமாக எழுதக்கூடுமேயாயினும் யான் இத்துடன் அடக்கிக் கொள்கிறேன்.

(தொடரும்)

உ

# பத்திரிகைகளின் உற்பத்தியும் பிரயோசனமும்.

('சுதேசமித்திரன்' ஆசிரியர் திரு. ஸீ. ஆர். ஸ்ரீநிவாசன் அவர்கள் சென்னை வெஸ்லி ஹைஸ்கூல் தமிழ்ச்சங்கத்தில் 18—10—41ல் ஆற்றிய சொற்பொழிவின்சுருக்கம்.)

வெஸ்லி பள்ளிக்கூடத்தில் ஏறக்குறைய 30-வருஷங்களுக்கு முன்பு 2-வாரகாலம் தாம் உபாத்தியாயர் வேலை பார்த்ததைப்பற்றி முதலில் பிரஸ்தாபித்து, பள்ளிக்கூடத்தைப் பார்க்கையில் தமக்குப் பழையஞாபகம் வருகிறதென்றும், 30 வருஷங்களாகநடந்துவரும் பள்ளிக்கூடம் இன்றுஎப்படி நடக்கிறதுஎன்பதைப்பார்க்கவேண்டுமென்ற ஆசையாலேயே தாம் அங்குவர ஒப்புக்கொண்டதாகவும் கூறினார். பத்திரிகைகளின் பிரயோசனம் என்னஎன்பதைப்பற்றித் தாம் பேசப்போவதாக விளம்பரஞ் செய்யப்பட்டிருந்ததாகவும், ஒவ்வொரு காரியத்தை நாடும்போது அது சம்பந்தமான உத்தியோகத்தில் மனிதர்களுக்கு ஆசை ஏற்படுவது சகஜமென்றும், அம்மாதிரியே பத்திரிகையைப்படிக்கும்போது ஆசிரியாகவேண்டுமென்ற ஆசை படிப்பவர்களுக்கு ஏற்படுவது இயற்கையென்றும், ஆனால் பத்திரிகை ஆரம்பித்து அதைத் திறம்பட நடத்துவது எளிதல்லவென்றும் அவர் எடுத்துரைத்து இத்தேசத்துப் பத்திரிகைகளின் வளர்ச்சியைப் பற்றியும் கூறியதாவது:—

இந்நாட்டிலிருப்பது ஆங்கில அரசாங்கம். ஆங்கிலத்தாலே பலனை எதிர்பார்க்கிறோம். ஆகையால்தான் இன்னும் ஆங்கில பாஷைப் பத்திரிகைகளுக்குத்தேசத்தில் செல்வாக்கு அதிகமிருந்து வருகிறது. முதலில் இத்தேசத்தில் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளே நடந்து வந்தன. அதிலிருந்து வழக்கம் பிறந்து இந்தியர்கள் ஆங்கில பாஷைப் பத்திரிகைகள் நடத்த ஆரம்பித்தார்கள். இதிலிருந்து வேகம் புறப்பட்டுத் தேசபாஷைப் பத்திரிகைகள் வெளிவந்தன. காலத்தின் வேகத்திற்கு இது அறிகுறியானால் தேசபாஷைப் பத்திரிகைகளுக்குள்ள செல்வாக்கு இன்று மிதமிஞ்சியிருக்கவேண்டும். ஆனால் உண்மையில் அப்படியில்லை. 30 வருஷங்களுக்கு முன்பு ஆங்கிலப் பத்திரிகைகளுக்கே அதிக செல்வாக்கு இருந்தது. இன்னும் அப்பத்திரிகைகளுக்குத்தான் செல்வாக்கு இருந்து வருகிறது. காரணம் என்ன?

பத்திரிகைகளை வாங்கிப் படிப்பவர்கள்தான் அவற்றுக்கு மதிப்பை உண்டாக்குகிறார்கள். இந்நாட்டில் தேசபாஷை கற்றவரோ அதிகம். ஆகையால் நியாயமாகத் தேசபாஷைப் பத்திரிகைகளுக்கல்லவா அதிக செல்வாக்கு இருக்கவேண்டும்? அப்படியில்லை. தேசபாஷை தெரிந்தோரில் பெரும்பான்மையோர் பத்திரிகை படிப்பதில்லை. படிக்கும் சிலரில் அநேகர் வரட்சையால் பத்திரிகைகளைக் கடன் வாங்கிப்படிக்கிறார்கள். மற்ற மாகாணங்களில் தேசபாஷைப் பத்திரிகைகளுக்கு அதிகச் செலாவணி ஏற்பட்டுவிட்டது. வங்காளத்திலுள்ள 'ஆனந்த பஜார்' பத்திரிகை ஆரம்பித்து இப்பொழுது கால் நூற்றாண்டு ஆகாவிடினும் அப்பத்திரிகை 60000 பிரதிகள் செலவாகின்றன. ஹிந்தி, மராத்தி பத்திரிகைகளும் 20000, 30000 செலவாகின்றன. சென்னையிலுள்ள தமிழ்ப் பத்திரிகைகளோ 10000-த்திலிருந்து 20000 வரையில்தான் எட்டிப் பார்க்கின்றன. தமிழ் மாகாணம் சம்பந்தப்பட்டவரையில் இது பெரிய அவலம். இதற்குக் காரணம் மக்களின் மனப்பான்மை.

இந்தியா முழுவதிலும் எந்த ஆபீசில் நுழைந்தாலும் தமிழனைப் பார்க்கலாம். நம்மவர்கள் ஆங்கிலம் கற்பதில் வல்லவர்கள். ஆங்கிலம் கற்றுவிட்டால் தமிழ்ப் பத்திரிகையைப் புரட்டிப் பார்ப்பதும் கௌரவக் குறைவு என்று நினைக்கிறார்கள். அரைகுறை ஆங்கிலம் கற்றுவிட்டாலே இந்த மனப்பான்மை ஏற்பட்டுவிடுகிறது. இவர்கள் தான் போகட்டும். வீட்டிலிருக்கும் பெண்களாவது தமிழ்ப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவர்களும் 3-வது பாரம் 4-வது பாரம் என்று வாசித்து விட்டார்கள். அவர்களுக்கும் தமிழ்ப் பத்திரிகை வாசிப்பது கணிசக் குறைவாயிருக்கிறது. இப்பொழுது தமிழ்ப்பத்திரிகைகள் செலாவணியாகிறதென்றால் காலத்தின் வேகமல்ல அதற்குக் காரணம். மகாத்மாஜி பொதுமக்களைத் தேசிய இயக்கத்தில் சேர்க்க ஆரம்பித்தபின் ஆங்கிலம் தெரியாதவர்கள் விஷயமறிந்து கொள்ளத் தேசபாஷைப் பத்திரிகைகளை நாட ஆரம்பித்தார்கள். இதனால்தான் தேசபாஷைப் பத்திரிகைகளுக்குச் செலவாணி ஏற்பட்டது. பத்திரிகைகள் வளர்க்கவேண்டுமானால் மக்களுக்கு அவசியமாகவேண்டியது தாய்ப் பாஷையில் அபிமானம்.

“தமிழ்ப் பத்திரிகையை நீங்கள் ஏன் வாசிப்பதில்லை” என்று [illegible]வரைக் கேட்டேன், “அவற்றை வாசித்தால்



புரியவில்லை” என்று பதில் கிடைத்தது. இது யார் தோஷமென்பதை அவர்கள் நினைக்கவில்லை. அந்த நண்பர்களிலொருவர் வக்கீல். அவர் வீட்டுக்கு நான் போயிருந்தபோது அவர் கட்சிக்காரருடன் பேசிக்கொண்டிருந்தார். “உங்கள் பெட்டிஷனை பைல் செய்தேன். ஜட்ஜ் பர்வர்ஸாயிருந்ததால் டிஸ்மிஸ் பண்ணிவிட்டான்” என்று அவர் சொல்லிக்கொண்டிருந்தார். இப்படிப் பேசுபவர்களை 'பெட்டிஷன் என்பதற்கு மனு என்று வைத்துக்கொள்ளுங்கள்; பைல் என்றால் தாக்கல் என்று சொல்லுங்கள்; நாங்கள் அப்படித்தான் பத்திரிகையில் போடுகிறோம்' என்று சொன்னால் அவர்கள் கேட்பதில்லை. ஆங்கிலபாஷை மோகமோ அதிகமாயிருக்கிறது. சில நாளைக்கு முன்பு காலட்சேபத்தில் கூட பாகவதர் இரண்டொரு ஆங்கில வார்த்தைகளைப் போட்டால்தான் மதிப்பாயிருந்தது. இப்படியெல்லாமிருக்கையில் தமிழ்ப் பத்திரிகை புரியவில்லையென்றால் தோஷம் யார்மேல்? தாய்ப்பாஷையில் அபிமானம் ஏற்பட்டால்தான் தேச பாஷைப் பத்திரிகைகள் செலாவணியாகும். செலாவணியானால்தான் அவற்றுக்கு மதிப்பு உண்டு.

போதிய முதல் இல்லாமல் தமிழ்ப் பத்திரிகைகள் பல ஏற்பட்டு அற்பாயுசாகப் போய்விடுகிறது. பத்திரிகைகளுக்கு விளம்பர வருமானம் முக்கியமாகும். 5-வருஷகாலமாவது ஒரு பத்திரிகை நிலையாக நடைபெற்றால்தான் அதற்கு நிரந்தரமான விளம்பர வருமானம் ஏற்படும். இப்படிப் பத்திரிகை நடத்தும் பொறுப்பு யாரிடமிருக்கவேண்டும்?

பேப்பரை விற்று தம்பிடி தம்பிடியாகப் பொறுக்கி அதற்கு நிலையான சொரூபம் கொடுத்து நிர்வகிப்பதென்றால் பொறுப்பு ஆசிரியரிடம் மட்டுமிருந்தால் போதாது. நிர்வாகஸ்தரிடம் பொறுப்பு இருந்தால் தான் பத்திரிகை நிலைக்கும். பத்திரிகை நிர்வாகத்தில் அவன் ஜீவநாடியிருக்கிறதேயொழியப் பத்திரிகை நடத்தும் பாணியில் மட்டும் திறமை காட்டுவதால் பிரயோசனமில்லை. அதற்காக அசட்டு ஆசாமி ஒருவரை ஆசிரியராக வைத்துக் கொள்வதும் உதவாது. தலையங்கம் குறிப்புகள் எழுதுவது ருசியாயிருந்தால்தான் ஜனங்கள் வாசிப்பார்கள். ஆனால் இதிலுள்ள நிர்ப்பந்தங்களையும் கவனிக்க[illegible]. 'இதென்ன பேப்பர் காரசாரமில்லையே' [illegible]டிருக்கிறார்கள். கேட்ப

வர்களுக்குக்கஷ்டம் ஏதுமில்லை. 'அசலாத்துப்பிராம்மணு பாம்பைப் பிடி அல்லித்தண்டு போலிருக்கும்' என்று சொல்வதில் என்ன கஷ்டம்? பத்திரிகைகளுக்கு நிர்ப்பந்தகள் அதிகம். சாதாரண மனிதனுக்கிருக்கும் உரிமையைவிடப் பத்திரிகைகளுக்கு அதிக உரிமையில்லை. ஆனால் பத்திரிகைகள்மேல் கண்காணிப்பு அதிகம். தனி மனிதன் ஏதாவது பேசினுல் அது அவனுடன் போகிறது. பத்திரிகைகள் எழுதுவதைப் பலர் வாசிக்கிறார்கள். ஆகையால் தான் பத்திரிகைகள் மேல் அதிகக் கட்டுப்பாடு. சுதந்தர நாடுகளில் பத்திரிகைகளுக்குச் சில உரிமைகளுண்டு. இங்கு நிலைமை அப்படியில்லை. ஜனங்களுக்கு ஏதாவது ஆதரவாக எழுதினுல் அரசாங்கத்துக்குக் கோபம். அரசாங்கத்துக்கு ஆதரவாயிருந்தால் ஜனங்கள் வாசிக்கமாட்டார்கள். இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் பத்திரிகை ஆரம்பித்து நடத்தினுல் பலன் என்ன?

பத்திரிகை வாசிப்பதால்வெகுதூரத்தில் நடக்கும் விஷயங்களை வெகு சீக்கிரத்தில் குறைந்த செலவில் தெரிந்து கொள்ளலாம். ராஜீய, வியாபார, சமுதாய, விளையாட்டு விஷயங்களில் அறிவு வளரும். ஆகவே பத்திரிகைகளை நீங்கள் விலைக்கு வாங்கிப் படிப்பதால் பத்திரிகைகளால் உங்களுக்கும் உங்களால் பத்திரிகைளுக்கும் பரஸ்பரதன்மை ஏற்படுவதோடு நாட்டுக்கும் நன்மை உண்டு. என்று கரகோஷத்தினிடையே கூறிமுடித்தார்.

---

## இராகு, குளிகை முதலிய காலங்கள்.

| வாரம் | இராகு காலம் | குளிகைகாலம் | எமகண்டம் | வாரசூலை |
|---|---|---|---|---|
| ஞாயிறு | 4½ ... 6 | 3 ... 4½ | 12 .... 1½ | மேற்கு |
| திங்கள் | 7½ .... 9 | 1½... 3 | 10½...12 | கிழக்கு |
| செவ்வாய் | 3 .... 4½ | 12 .... 1½ | 9 ...10½ | வடக்கு |
| புதன் | 12 ... 1½ | 10½...12 | 7½... 9 | வடக்கு |
| வியாழன் | 1½ ... 3 | 9 ...10½ | 6 ... 7½ | தெற்கு |
| வெள்ளி | 10½ ...12 | 7½... 9 | 3 ... 4½ | மேற்கு |
| சனி | 9 ...10½ | 6 ... 7½ | 1½... 3 | கிழக்கு |

# செய்தித் திரட்டு.

கோத்தமங்கலம்:—திருவாளர் சி. சு. ராம. சு. ராம. இராமன்செட்டியாரவர்கட்கு அறுபதாவதாண்டு நிறைவுவிழா ஆகமோக்தமமாக விசுவஸு கார்த்திகைமீ ௧௮உ உரோகணிநாளில்நடைபெற்றது. தம்பதிகள் நித்திய நியமம் முடித்து பிள்ளையார் கோயிலுக்குப் போய்வந்து தங்கள் மாளிகையில் அலங்கரிக்கப்பெற்ற மணப்பந்தலில் அரதன பீடத்து அமர்ந்தனர். சிவாசாரியர்களும் அருமறை அந்தணாளர்களும் கலசபூசை செய்து வேள்வியாற்றித் தம்பதிகளுக்குத் திருமஞ்சன நீராட்டினர். புத்தாடை புனைந்து தம்பதிகள் தமருடன் சிவாலய சேவைசெய்து வந்தனர். சிவநேச மிக்க நடுநிலையாளராகிய செட்டியாரவர்கள் அறங்கள் பலவற்றிற்கு பல்லாயிரக்கணக்கான பொருள் வழங்கினார்கள். நகர வணிகப் பெருமக்களும் பிறரும் நிறையவந்து குழுமியிருந்தார்கள். அந்தணராதிய அனைவர்க்கும் அறுசுவையினும் உறுசுவைத்தாய அமுதருத்தப்பெற்றது. அனைவரையும் நட்புறவினர்களால் நன்கு வரவேற்று மரியாதை செய்யப்பெற்றது.

சிவாலயத்தில் சிறப்பொடு பூசனைபுரிந்து இரவு ஐம்பெருங்கடவுளர் திருவுலாவும் செய்யப்பெறறு எல்லாவகையானும் இனிது நிறைவேறியது.

சிதம்பரம்:— ஸ்ரீ சிவகாமவல்லி சமேத தில்லையம்பலவாணருக்கு மார்கழி ௧௦உ தொடங்கி திருவிழாநடைபெறுகிறது. ௧௮உ யாகிய இன்று தேர்த்திருவிழா நடைபெற்று நாளை ராஜ சபையில் சூரிய உதயத்துக்கு முன் மகா அபிஷேகமும் திருவாபரண அலங்காரக்காட்சியும் சோடசோபசாராதி மகாபூசையும் ஐம்பெருங்கடவுளர் திருவுலாவும் நண்பகல் தீர்த்தவாரியும் ஆருத்ரா மகாதெரிசனமும் ஞானாகாச சிற்சபா பிரவேசமும் அடுத்த நாள் புட்பப்பல்லக்குக் காட்சியும் நடைபெறும்.

காஞ்சிபுரம்:— மெய்கண்டார் கழகத்தினர் கார்த்திகை ௨௨உ திருவேகம்பநாதர் திருக்கோயிலில் வழிபாடு செய்து தழுவக் குழைந்த படலத்தில் ஞானபாதமும் அதன்பயனும் என்பதுபற்றி விரிவுரையும் மாலை திருக்குறள் விரிவுரையும் ௨௫உ உயர்திரு ஆறுமுக நாவலரவர்கள் திருநாட்கொண்டாடி 'நாவலர் நற்பணி', 'நாவலரவர்களின் சைவத் தொண்டு' என்னும் விரிவுரைகளும் மார்கழி ௧உ சுவாதிநாள் மெய்கண்டதேவர் வழிபாடும் சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரம் இரண்டாம் அதிகரணம் என்பதுபற்றி விரிவுரையும் நிகழ்த்தினர்.

பழநி:—கார்த்திகை ௮உ தொடங்கி ௧௭உ திருக்கார்த்திகைத் திருவிழா சிறப்பாக நிறைவேறியது. ஒவ்வொருநாளும் மாலை 5 முதல் 7 மணி வரை தக்கார் பலர் சைவ சமய விரிவுரை மலைக்கோயிலில் ஆண்டவன் சந்நிதானத்தில் நிகழ்த்தினர்.. ஒலிபரப்புக் கருவி யமைக்கப்பெற்றது. அன்பர்கள் திருவிழாக் கண்டும் விரிவுரை கேட்டும் இன்புற்றனர். திருக்கார்த்திகையின் தத்துவார்த்தப் பொருள் அச்சிட்ட துண்டுத்தாள்களும் பாராயணச் செய்யுள் அச்சிட்ட தாள்களும் வழங்கப் பெற்றன. தேவத்தானப் புரவலர் திரு, J. M. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் திறம் போற்றற்குரியது.

# சிவநேசன்.

தஞ்சை:—அகில மருத்துவ சங்கத்தின் 22 வது கூட்டம் 20-12-41ல் கவிபூஷணம் டாக்டர் P. K. வேங்கடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 23-வது கூட்டம் 4-1-42 மாலை நடைபெறும்.

அகில சோதிட சங்கத்தின் 8-வது கூட்டம் திரு, ராமசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் 21-12-41ல் நடைபெற்றது. 9-வது கூட்டம் 4-1-42 காலை நடைபெறும்

கரந்தைத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் சென்னை மாகாணத் தமிழர் 8-வது மாநாடு மார்கழி ௬௰ மாலை நடைபெற்றது. திருவாளர், V. நாடிமுத்துப் பிள்ளையவர்கள் தமிழ்க்கொடி ஏற்றினர். திருவாளர் பி. ஆவுடையப்ப பிள்ளையவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தனர். திருவாளர், V. நாடிமுத்துப் பிள்ளையவர்கள் தலைமையில் விரிவுரைகள் நிகழ்ந்தன. செட்டிநாட்டரசரவர்களுக்கு 'பல்கலைவள்ளல்' என்னும் பட்டம் வழங்கப் பெற்றது.

அடுத்தநாள் காலை மாலை தமிழ்ப்புலவர் மாநாடும் மாலை தமிழர் மாநாடும் நடைபெற்று தீர்மானங்களும் செய்யப்பெற்றன.

திருச்சிராப்பள்ளி:— தமிழ் இசை மாநாடும் தமிழ்ப்புலவர் மாநாடும் மார்கழி ௬, ௭௳களில் முறையே நடைபெற்று நிறைவேறின.

வாலாஜாதாத்:—திரு, வா. தி. பஞ்சாக்ஷர முதலியாரவர்கள் துரைத்தனசேனைக்கணக்கர் தலைவராயிருந்து ஓய்வுபெற்று இந்துமத பாடசாலையை வளர்த்து தமது 58 வது வயதில் 3-12-41ல் இறைவன் திருவடி அடைந்தனர். இவர்களின் பிரிவுக்கு வருந்துகிறோம்.

பாபநாசம்:— நூற்றெட்டு சிவாலயம் சீரணோத்தாரணஞ் செய்து தை ௧௦௳ வெள்ளிக்கிழமை சப்தமி ரேவதிநாள் காலை ௧௦-மணிக்குமேல் ௧௧-மணிக்குள் ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத ராமலிங்க சுவாமிக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகமும் அன்றிரவு திருப்பவனியும் நடைபெறும்.

## "ஞானசம்பந்தம்"


தருமபுர ஆதீனத்திலிருந்து இப்பெயருள்ள மாதாந்தரப் பத்திரிகை வெளிவருகின்றது. சைவசமயக் கொள்கைகளை வெளியிடும் நோக்கத்துடன் பிரசுரம் செய்யப்படுகிறது.

சந்தா விபரம். உள்நாடு (இந்தியா, சிலோன்.)

ஆண்டு 1-க்கு ரூ 1—8—0.
வெளிநாடு ,, ரூ 2—0—0.
தனிப்பிரதி (தபாற் கூலிவேறு) ரூ 0—2—0.

பத்திரிகை வேண்டுவோர் முன்பணம் அனுப்பிச்சந்தாதாரராகச் சேரவேண்டும்.

செயலாளர்:— "ஞானசம்பந்தம்" காரியாலயம்,
ஷண்முக விலாசம், தருமபுரம், மாயவரம்.


---


இட்டை 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர், பலவான்குடி ராம. கு. ராமு. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.